

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு நகராட்சியில் ரூ.188.25 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், நகர மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் இடம் தேர்வு செய்வது குறித்து ஆடுதுறையில் நேற்று (30.04.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கலியாணசுந்தரம் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் , கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க. அன்பழகன் , மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் . கும்பகோணம் சார் ஆட்சியர் திருமதி.ஹிருத்யா எஸ்.விஜயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்

## 2019 முதல் 2022ஆம் ஆண்டுகளில் – 3 நிதி ஆண்டுகளில்

# ரூ.968.111 கோடி மதிப்பிலான மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கை!

## சட்டப்பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து உரையாற்றினார்! குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றம்!

**சென்னை, மே 1 -**

**கடந்த 2019 முதல் 2022ம் ஆண்டு வரையிலான 3 நிதியாண்டுகளில், ரூ.968.11 கோடி மதிப்பிலான மிகைச் செலவினங்களுக்கான மானிய கோரிக்கைகளை சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து உரையாற்றினார். அவை குரல் வாக்கெடுப்பு மூலமாக நிறைவேற்றப்பட்டது.**

அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:-

2019-2020 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2019-2020 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2019-2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.942 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின்முன் வைக்கப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச்செலவு, "பள்ளிக் கல்வித் துறை", பாசனம் (பொதுப் பணித் துறை)" மற்றும் "உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டதாலும் சரண் விடுப்பு காசாக்குதல் அதிகரித்ததாலும் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் தொகை மற்றும் அகவிலைப் படி ஆகியவை உயர்த்தப்பட்டதாலும் "பள்ளிக் கல்வித் துறை" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

பணியாரளமைப்பு, இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கான கூடுதல் விழுக்காடு செலவுகள் மற்றும் பல்வேறு திட்டங்கள்/திட்டப் பணிகள்/பெருந்திட்டங்கள் மீதான வட்டிக் கட்டணங்களால் "பாசனம் (பொதுப் பணித் துறை)" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் திருப்பத்தூர், ராணிப்பேட்டை, தென்காசி, செங்கல்பட்டு மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய ஐந்து புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டதாலும், ஊதியச் செலுத்துகை அதிகரித்ததன் காரணமாகவும் "உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே, 2019-2020 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன்.

2020-2021 ஆம் ஆண்டில், ஒரு மானியக் கோரிக்கையின்கீழ், அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கையினை இம்மான்றத்தின் முன்வைக்க விழைகிறேன்.



2020-2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், ஒரு குறிப்பிட்ட மானிய கோரிகையின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி யொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்தபிறகு, 2020-2021 ஆம் ஆண்டில் அம்மானியத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி யொதுக்கத்திற்கும் மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் அம்மானியக் கோரிக்கை வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 2020-2021 ஆம் ஆண்டில் 20.87 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கை இம்மான்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் மிகைச் செலவு "தொழில் துறை" மானியத்தின்கீழ் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பத்தூர், ஆம்பூர் மற்றும் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை, மின் கட்டணம் மற்றும் கடனை செலுத்துதலுக்கான வழிவகை முன்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டதால் "தொழில் துறை" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே, 2020-2021 ஆம் ஆண்டின் மிகைச் செவவிற்கான மானியக் கோரிக்கைக்கு இம்மான்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன்.

2020-2021ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

2021-2022 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ், அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மான்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2021-2022 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு. 2021-2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும்அனுமதிக்கப்பட்டநிதியொதுக்கத்திற்கும் மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 2021-2022 ஆம் ஆண்டில் 5.24 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் "மனித வள மற்றும் மேலாண்மைத் துறை", ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில், கோவளம் வடிநிலப் பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளுக்கு நிலையான நகர்ப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்திட நேரடி செலுத்துகையினை புத்தக சரிகட்டுதல் செய்ததன் காரணமாக "நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

இராணிப்பேட்டை மாவட்டத்தின் மேல்விஷாரத்தில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கூடுதல் கொள்ளளவை உருவாக்கியதால் "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை" மானியத்தின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

பணியாளரமைப்பு, இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கான சதவிகிதக் கட்டணங்களை புத்தக சரிக்கட்டல் செய்ததால் மனித வள மேம்பாட்டு மேலாண்மைத் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே, 2021-2022 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

---

### கோடம்பாக்கம் மண்டலத்தில் ரூ.35.40 இலட்சம் மதிப்பில் முடிவுற்ற திட்டப்பணி பயன்பாட்டிற்கு திறப்பு!

## ரூ.6.58 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணி!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்!

*சென்னை,மே.1*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (30.04.2025), கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், வார்டு-142, ஜோன்ஸ் சாலை சென்னை தொடக்கப் பள்ளி வளாகத்தில் சிட்டீஸ் திட்டத்தின் கீழ்(CITIIS) ரூ.5.75 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள தரைத் தளம் மற்றும் மூன்று அடுக்குகளுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, இதற்கான திட்ட வரைபடத்தினைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.*

*முன்னதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் , கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், வார்டு-139, அண்ணாமலை நகர், 3வது தெருவில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.35.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, அதன் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.33 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள பல்நோக்குக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.*

*பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் , கோடம்பாக்கம் மண்டலம், வார்டு - 139, கங்கையம்மன் கோயில் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள ஆண்களுக்கான நவீன உடற்பயிற்சிக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக வார்டு 142, வீ.வீ. கோவில் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூட கட்டுமானப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.*

*இந்நிகழ்ச்சிகளில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப. சுப்பிரமணி, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

---

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்,

## பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 01/05/25, வியாழக்கிழமை, மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: கழக ஆக்கப்பணிகள்**

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு.**

செயலாளர் - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! மு.சரவணன்.எம்.சி. தலைமை!

## திரு.வி.க நகர் வடக்குப் பகுதி சார்பில் இன்னிசை பட்டிமன்றம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

சென்னை,மே.1-

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் வடக்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மனிதநேயம்-71, சொல்லால் சுடர் ஏற்போம்! சூரியனை தினம் போற்றுவோம்!! எனும் தலைப்பில் 30.4.2025, புதன்கிழமை மாலை: 6.00 மணி அளவில், சென்னை, புளியந்தோப்பு, டிகாஸ்டர் சாலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், 72வது மாமன்ற உறுப்பினர் மு.சரவணன்.எம்.சி. தலைமையில் நடைபெற்ற மாபெரும் இன்னிசை பட்டிமன்றத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார். இந்த இன்னிசை பட்டிமன்றத்தில் நடுவராக செம்மொழி கவியரசி கல்பாக்கம் ரேவதி அவர்களும், இப்பட்டிமன்றத்தில் பேச்சாளர்களாக விஜய் டிவி கலக்கப்போவது யாரு புகழ் செம்மொழி அன்னலட்சுமி, சன். டிவி புகழ் பேராவூரணி நீலவேணி, கலைஞர் தொலைக்காட்சி புகழ் மணப்பாறை லலிதா, விஜய் டிவி புகழ் கல்பாக்கம் காயத்ரி ஆகியோர் உரையாற்றினர்.

இவ்விழாவில் சென்னை பெருநகர மேயர்.பிரியாராஜன் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பகுதி கழகச் செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, இசட். ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ் குமார் எம் சி, வானவில் விஜய், லயன் பி. உதயசங்கர், எம் பெரோஸ் கான்,



கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, தமிழ்ச்செல்வி எம்.சி. எல்.ரமணி. எம் சி, பெரம்பூர் ஆர் ராஜன். வட்ட கழகச் செயலாளர் எஸ். புஷ்பராஜ்,

ஜெ.கிருஷ்ணகுமார், பரிமளா சுரேஷ்பாபு மா.ருத்ரமூர்த்தி, சுரேஷ் குமார் என்ற பொல்லு சுரேஷ், எம் தமீம் பாய், எஸ் வெங்கடேசன், எஸ் சசிகுமார்,வி.கே வெங்கடேசன் மற்றும் கழகத் தோழர்கள் செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள்: எம்.இசட். அபோய், எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ்பாபு, மா ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு, மனித நேயம் - 70, இறையாண்மை காக்கும் தமிழண்மை! இவரால் அடைந்தது நம் மேன்மை!! எனும் தலைப்பில் எழும்பூர் வடக்கு பகுதியில், மாபெரும் புகழரங்கம் 29.04.2025 செவ்வாய்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, சூளை, அங்காளம்மன் கோயில் தெரு அருகில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமை வகித்தனர். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சொ.வேலு எம்சி, வி.சுதாகர், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, கோ. மணி, புரசை ஜி.தாமாதேரன், பரிதி இளம்சுருதி எம்.சி, இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, க.நந்தீஸ்வரன், அ. நிர்மலாதேவி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, க.வினோத், கே.கோகுல், எம். தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளை.சுப்பராயலு, சி.தயாளன், வி.அபாய், ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் முன்னிலை வகித்தனர்.

என்.மனோகரன், ம.ராஜேந்திரன், வே.மோகன், வி.ஜான்சி, எஸ். ராஜேந்திரன், சி.குணசேகரன், சி.தமிழ்செல்வன், ப.பன்னீர்செல்வம், எம்.பாலாஜி, பா.லோகேஷ் ஆகியோர் வரவேற்றனர்.

இப்புகழரங்கத்தில் தகவல் தொழில்நுட்பவியல் (ம) டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன், நடிகர் தியாகராஜன், நடிகர் யோகி பாபு, நடிகை அறந்தாங்கி நிஷா ஆகியோர் புகழுரைத்தனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், பெருநகர சென்னை மேயர் ஆர்.பிரியாராஜன், டி.வி.வேலு, எம். மலர்மாறன் கே.அன்னபூரணி எஸ். ஜெகதீசன், எழும்பூர் வி.விஜயகுமார் ஆர்.பாபு டால்பின் எஸ்.ஹரி, இ. மொய்தின் வான்மதிகதிரவன், முரளிதரன் இரா.ஜெயசங்கரன் த.செபஸ்டின் மா.காந்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் ந.பாலு, சு.மனோகர் நன்றி கூறுகிறார்கள்.